## கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**நாள்** 14.10.2025

**அசல் வழக்கு எண்.136/2022**

**வா.சா.2 – கிருஷ்ணன், த/பெ.வடிவேல் நாய்க்கர்**

**சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்**

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நீங்கள் ஒரு தரப்பினர் இல்லை என்றால் சரிதான். உங்களுக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வந்ததா என்றால் வரவில்லை. வாதி உங்களின் சாட்சியம் அளிக்க அழைத்ததால் நீங்கள் வந்தீர்கள் என்றால் சரிதான். வாதியின் வழக்கறிஞர் தயாரித்த வாக்குமூலத்தில் நீங்கள் கையொப்பம் போட்டீர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கை பொருத்த அளவில் உங்களுக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த வாதி உங்களுடைய உடன்பிறந்த சகோதரன் என்றால் சரிதான். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்து கிராம நத்தம் என்றால் சரிதான். மொத்த பரப்பளவு எவ்வளவு என்றால் 9 ¾ சென்ட் ஆகும். வழக்கு சொத்து உங்கள் தாத்தாவுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அப்பாவின் அப்பா என்றால் சரிதான். உங்கள் தாத்தாவுக்கு பிறந்த உங்கள் அப்பா மற்றும் அவரது சகோதரர்கள் அனைவரும் வாய்மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். வரைபடத்தில் H என்று குறிப்பிட்ட பாகத்தை உங்கள் தகப்பனாருக்கு ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். அதேபோல் மீதி உள்ள இடங்களை உங்கள் அப்பா அவர்களுடைய சகோதரர்களிடம் இருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். மூதாதையர் சொத்து என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அவ்வாறு மூதாதையர் சொத்து என்று காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் செய்துள்ளேன். உங்கள் அப்பாவிற்கு பாகத்தில் தனிப்பட்ட வகையில் வந்த சொத்து என்றால் சரிதான். உங்கள் அப்பா எப்பொழுது இறந்தார் என்றால் கடந்த 2003ம் ஆண்டு ஜூன் மாதம் இறந்துவிட்டார். உங்கள் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு உயில் எழுதி வைத்திருந்தார் என்றால் நான் சர்வீஸில் இருந்ததால் எனக்கு தெரியாது. உயில் பற்றி எனக்கு தெரியாது. உங்கள் பாகத்திற்கு

உங்களுக்கு F என்று குறிப்பிட்டு செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரிதான். அதேபோல் முருகன் என்பவருக்கும் பாகம் ஒதுக்கி கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். சண்முகம் என்பவருக்கு பாகம் ஒதுக்கவில்லை என்றால் சரிதான். அவர் உயிர் மூலமாக எழுதிய சொத்தை பிறகு உங்கள் இருவருக்கும் செட்டில்மெண்ட் ஆவணம் வாயிலாக கொடுத்துவிட்டார். சண்முகத்திற்கு பாகம் கொடுக்கவில்லை மீதி பாகத்தை சண்முகத்திற்கு ஒதுக்கி வைத்து விட்டார் என்றால் ஒதுக்கவில்லை. நீங்கள் குடியிருக்கும் வீட்டிற்கு பின்பாகத்தில் முதல் பிரதிவாதி வசந்தகுமாரி வசிக்கிறார் என்றால் சரிதான். அவர்கள் பின்பாகத்தை அடைய நான்கடி வழி உள்ளது என்றால் சரிதான். அந்த நான்கடி ஆக்கிரமிப்பு செய்ய நீங்கள் முயற்சி செய்ததால் அதைக் கேட்டதால் நீங்கள் வாதியை தூண்டிவிட்டு இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரி இல்லை. மேற்படி H பாகம் நீங்களும் உங்கள் சகோதரர்களும் கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்கிறீர்கள் அதை காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் ஆவணம் இல்லை ஆனால் அனுபவித்து வந்தோம். நீங்களும் சண்முகம் என்பவரும் ஒரு விடுதலை பத்திரம் எழுதி உள்ளீர்கள் என்றால் சரிதான். அது 2007 ஆம் ஆண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி விடுதலைப் பத்திரம் எழுதிய விவரம் வாதி முருகனுக்கு தெரியும் என்றால் தெரியாது. உங்களுக்கு ஏற்கனவே தெரியும் சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து கொண்டு பணம் பறிக்க இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typograped to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-T.Thirumal
Additional Subordinate Judge,
Kancheepuram.